தினமலர்

# வனபாதுகாப்பு விழிப்புணர்வு விழா

**கோவை ● மார்ச் 22 -**
அவிநாசி ரோட்டில் அமைந்துள்ள, ஒய்.டபிள்யூ.சி.ஏ., பள்ளியில், உலக வனநாள் விழா கொண்டாடப்பட்டது.

வன மரபியல் மற்றும் மர பெருக்கு நிறுவன அலுவலர் முத்ராயன் தலைமை வகித்து, நிகழ்ச்சியை துவக்கிவைத்தார். இதில், பள்ளி மாணவர்களுக்கு வனத்தின் முக்கியத்துவம், வனபாதுகாப்புக்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள், அழிந்து வரும் சிட்டுக்குருவிகள், காடுகளின் வகைகள், மரங்களின் வகைகள் உள்ளிட்ட, பல்வேறு தலைப்புகளில் விளக்கங்கள் அளிக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மரம் வளர்ப்பு, வன பாதுகாப்பு குறித்த அறிவுசார்ந்த கேள்விகள் அடங்கிய, விழிப்புணர்வு கையடக்க புத்தகம் வழங்கப்பட்டது.

பள்ளி மாணவர்கள் சார்பில், இயற்கை விழிப்புணர்வு கருத்துக்களை மையப்படுத்தும் வகையில், நடனம், இசை, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சிறப்பாக செயல்பட்ட மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில், பள்ளி தலைவர் பூர்ணவள்ளி மதிபரணம், தாளாளர் ஆஷா செந்தில் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

Source:
http://epaper.dinamalar.com/PUBLICATIONS/DM/COIMBATORE/2015/03/22/ArticleHtmls/22032015252012.shtml?Mode=1